# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No.453/2019

Deposition of பி.சா.2 witness of Plaintiff/Petitioner/ Defendant /Respondent Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X 1872 on the 11th day of September 2024.

Name : புவனேஸ்வரி :

**குறுக்கு விசாரணை:–**

2ம் பிரதிவாதி என் மகள். நான் சென்னையில் வசிக்கிறேன். என் மகள் தருமபுரியில் வசிக்கிறார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து என் மருமகனுடையது என்றும், 2 வது கையெழுத்து என் மகளுடையது என்றும் சொன்னால் சரிதான். என் மகன் தூக்கிட்டு இறந்தது தொடர்பாக வழக்கு நடந்து வருகிறது என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். ஆனால் அது தொடர்பான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது மகன் இறந்தது தற்கொலை என்று 2018 ல் வழக்கு முடிக்கப்பட்டுவிட்டது என்றும், தற்போது என் மகன் இறப்பு தொடர்பாக எந்த வழக்கும் நிலுவையில் இல்லை என்றும் சொன்னால் அது தொடர்பாக நான் விபரம் கேட்டுள்ளேன், பதில் எதுவும் வரவில்லை. என் மகளும், மருமகனும் தருமபுரியில் யார் யாரிடம் எவ்வளவு கடன் வாங்கியுள்ளார்கள் என்று எனக்குத் தெரியாது. என் மகன் நரேஷ்பாபு தொழில் தொடர்பாக கடன் பெறுவதற்காக வெற்றுப் பத்திரங்களில் கையொப்பம் போட்டு வைத்திருந்த

ஆவணங்களை வாதி பூர்த்தி செய்து 1, 2 பிரதிவாதிகள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளதாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பேரன் சுஜன் அஸ்வின் என் பாதுகாப்பில் உள்ளார் என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் நீதிமன்றம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தேவைப்பட்டால் கொடுப்பேன். எனது மகன் இறப்பிற்கு பின்பு எனது சம்மந்தி கிருஷ்ணமூர்த்தியின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதாக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சம்மந்தி கிருஷ்ணமூர்த்திமீது சொத்தை அபகரிக்க முயன்றது தொடர்பாக நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை. வாதி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளது தொடர்பாக நானோ என் மகளோ என் மருமகனோ சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனது மகளும், மருமகனும் வாங்கிய கடனை திரும்ப கொடுக்கக்கூடாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– L. கலைவாணி
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.